செய்தி வெளியீடு எண்: 241 நாள்: 20.03.2019

## செய்தி வெளியீடு

நடைபெறவிருக்கின்ற, 2019–ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற பொதுத் தேர்தல் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான இடைத் தேர்தலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும், அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்கவேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத அத்தகைய வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக, பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனுமொன்றை காண்பிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் ஆணையிட்டுள்ளது.

(i) கடவுச்சீட்டு;
(ii) ஓட்டுநர் உரிமம்;
(iii) மத்திய / மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களால் / வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள்;
(iv) புகைப்படத்துடன் கூடிய வங்கி / அஞ்சலக கணக்குப் புத்தகங்கள்
(v) வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN card);
(vi) தேசிய மக்கள்தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் கார்டு;
(vii) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அட்டை;
(viii) தொழிலாளர் நல அமைச்சக திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு ஸ்மார்ட் கார்டு;
(ix) புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்;
(x) பாராளுமன்ற/சட்டமன்ற/சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அலுவலக அடையாள அட்டை; மற்றும்

(xi) ஆதார் கார்டு

2. முந்தைய நேர்வுகளில் தேர்தல் ஆணையம் புகைப்பட வாக்காளர் சீட்டினை அடையாளத்திற்கான ஓர் ஆவணமாக அனுமதித்திருந்தது. இந்த ஆவணம் வாக்காளர் பட்டியலை இறுதி செய்த பிறகு, தேர்தல் நாளிற்கு சற்று முன்னர் வழங்கப்படுவதால் இதனை தனித்த அடையாளத்திற்கான ஆவணமாக உபயோகப்படுத்துவதற்கு எதிராக புகார்கள் பெறப்பட்டுள்ளன. புகைப்பட வாக்காளர் சீட்டில் பாதுகாப்பான அம்சங்கள் ஏதும் இல்லை. முந்தைய நேர்வுகளில் புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை வழங்கும் பணிகள் நிறைவடையாத நிலையில் புகைப்பட வாக்காளர் சீட்டு விநியோகிக்கப்பட்டது. தற்பொழுது 99 விழுக்காடு வாக்காளர்கள் புகைப்பட அடையாள அட்டையைப் பெற்றுள்ளனர். மேலும் வயது வந்தோர்களில் 99 விழுக்காட்டினர் ஆதார் அட்டையைப் பெற்றிருக்கின்றனர். மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில் இந்திய தேர்தல் ஆணையம் புகைப்பட வாக்காளர் சீட்டினை மட்டுமே இனிமேல் வாக்களிப்பதற்கான தனித்த அடையாள ஆவணமாக ஏற்றுக்கொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளது. எனினும், வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக புகைப்பட வாக்காளர் சீட்டு தொடர்ந்து அச்சிடப்படும். வாக்காளர்களுக்கு புகைப்பட வாக்காளர் சீட்டு தனித்த அடையாள ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படாது என்பதைத் தெளிவுபடுத்துவற்காக “இந்தச் சீட்டு அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஆவணமாக வாக்குச் சாவடியில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை அல்லது ஆணையத்தால் மாற்று ஆவணமாகக் குறிப்பிடப்பட்டுள்ள

11 ஆவணங்களில் ஏதேனும ஒன்றை எடுத்துச் செல்ல வேண்டும்,'' என்று தடித்த எழுத்துக்களில் புகைப்பட வாக்காளர் சீட்டில் அச்சிடப்பட்டியிருக்கும். புகைப்பட வாக்காளர் சீட்டு தொடர்ந்து அச்சிடப்படும்.

**3.** ஒரு வாக்காளர் வேறொரு சட்ட மன்ற தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருப்பாரேயானால் அந்த அடையாள அட்டையையும் இந்திய தேர்தல் ஆணையம் காட்டும் ஆவணமாகப் பயன்படுத்தலாம். ஆனால் அந்த வாக்காளருடைய பெயர் அந்த வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை அல்லது இந்திய தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட மேற்கூறிய எந்த ஒரு அடையாள ஆவணம் வைத்திருப்தால் மட்டுமே ஒரு வாக்காளர் தனது வாக்கைச் செலுத்தி விட முடியாது. அவருடைய பெயர் வாக்குச் சாவடிக்கு அனுப்பப்பட்ட வாக்ளார் பட்டியலில் இடம் பெற்றிருந்தால் மட்டுமே அவர் வாக்குரிமையைச் செலுத்த தகுதியுடையவர் ஆவார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**